பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண்.08 நாள் : 04.12.2017

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறும் எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், காவல் பார்வையாளர்கள் மற்றும் மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

-----

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறும் எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் திரு.கம்லேஷ் குமார் பந்த், இ.ஆ.ப., திருமதி.அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., காவல் பார்வையாளர்கள் திரு.இம்மானுவேல் கே. முய்வா, இ.கா.ப., திரு.குர்ஷீத் அகமது, இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.கா.விஸ்வநாதன், இ.கா.ப., மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்கள் மற்றும் பிற துறை தேர்தல் அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று (04.12.2017) ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தவின்படி நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, 50 இடங்களில் 256 வாக்குச்சாவடி மையங்கள் அமைத்து தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலினை கண்காணித்திட பொதுமக்கள் கூடுமிடங்கள் மற்றும் முக்கிய தெருக்களில் 87 இடங்களில் 225 ஐ.பி. கேமராக்கள் பொருத்தப்பட்டு ஆன்லைன் மூலம் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் வாகனங்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 23,213 இரண்டு சக்கர வாகனங்கள், 1,508 மூன்று சக்கர வாகனங்கள், 1,629 நான்கு சக்கர வாகனங்கள், 290 வணிக ரீதியிலான வாகனங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு இரண்டு நாட்களில் அடையாள அட்டைகள் வழங்கப்படும். மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் முன்பக்கம் பிறருக்கு தெரியுமாறு ஒட்டவும், இரண்டு சக்கர வாகனங்கள் வைத்திருப்பவர்கள் தங்களது கைகளில் வைத்திருக்குமாறும், இவற்றை பிறர் பயன்படுத்தக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் பணிக்காக 10 கம்பெனிகள் துணை இராணுவத்தினர் வரவுள்ளனர். தற்பொழுது, ஆயுதப்படையை சார்ந்த 200 பாதுகாப்பு படையினர் தேர்தல்

பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், Paytm, RTGS போன்றவற்றின் மூலம் வாக்காளர்களுக்கு பணபரிவர்த்தனைகளை மேற்கொண்டால் வங்கி அலுவலர்கள் தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலில் 360 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 1,300 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 360 ஒப்புகைச் சீட்டு வழங்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளது. வாக்குப்பதிவின்போது 50 மையங்களில் உள்ள 256 வாக்குச்சாவடிகளில் பணியாற்றக்கூடிய வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களாக 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–1 நிலையில் 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–2 நிலையில் 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–3 நிலையில் 307 அலுவலர்கள் மற்றும் 1,400 வாக்காளர்களுக்கு மேலுள்ள வாக்குச்சாவடிகளுக்கு வாக்குச்சாவடி அலுவலர்–4 நிலையில் 103 அலுவலர்கள், வாக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கும் அலுவலர்களாக 307 அலுவலர்கள் என மொத்தம் 1,638 மத்திய, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தேர்தலை கண்காணித்திட 6 பறக்கும் படைகள், 12 நிலைக் கண்காணிப்புக் குழு, 2 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேவைப்படும்பட்சத்தில் இக்குழுக்கள் அதிகரிக்கப்படும்.

மேலும் ஆய்வுக்கூட்டத்தில், தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒற்றைச் சாளர முறையில் அனுமதி அளிப்பது குறித்தும், அவற்றை தொடர்ந்து வீடியோ மற்றும் பறக்கும் படைகள் மூலம் கண்காணிப்பது குறித்தும், வேட்பாளர்கள் பிரச்சாரம் மேற்கொள்ளும் போது பிற நபர்களால் இடையூறு ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு அளிப்பது குறித்தும், தேர்தல் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்வது குறித்தும், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்தும், வாக்குப்பதிவு இடங்களை கணினி முறையில் ஒதுக்கீடு செய்தல், வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒதுக்கீடு செய்தல், வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்த்து தயார்படுத்தி, தேவையான பொருட்களை கையிருப்பில் வைக்கவும், அதற்கு தேவையான பொறியாளர்களை தயார்படுத்துதல் குறித்தும், தேர்தல் நடத்தை விதிகளை முறையாக வேட்பாளர்கள் பின்பற்றிட விளக்கிடவும், வேட்பாளர்களின் செலவு கணக்குகளை பராமரித்தல் குறித்தும், பொதுமக்கள் 100 சதவீதம் வாக்குப்பதிவு செய்திடும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வது குறித்தும், வாக்குப்பதிவு அன்று வாக்குச்சாவடியில் நுண்பார்வையாளர்கள் மூலம் வாக்குப்பதிவினை கண்காணித்திடவும், வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குப்பதிவு மையத்திற்கு எடுத்துச் சென்று, வாக்குப்பதிவு நிறைவுற்றவுடன் பாதுகாப்பாக வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்வது குறித்தும், தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை

மேற்கொள்ளுதல் குறித்தும், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் அனுமதி பெறாமல் ஒளிபரப்பப்படும் தேர்தல் விளம்பரங்கள், தேர்தல் விதிமீறல்கள் மற்றும் தகவல்களை கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, மின்வசதி, கழிப்பிட வசதி, சாய்தள வசதி மற்றும் பிற அடிப்படை தேவைகளை செய்வது குறித்தும், இப்பணிகளை அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.அன்புச்செல்வன், இ.ஆ.ப., சென்னை மாநகர காவல்துறை கூடுதல் ஆணையாளர் திரு.எச்.எம்.ஜெயராம், இ.கா.ப., மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்கள்/துணை ஆணையாளர்கள் திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., திரு.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., திருமதி.எஸ்.பிரியதர்ஷினி, இ.ஆ.ப., ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், தேர்தல் பொறுப்பு அலுவலர்கள் மற்றும் பிற துறை தேர்தல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**